ஒருவரும் சேரா ஒளியினில்
வாசம் செய்திடும் எங்கள் தேவனே
மனிதருள் யாரும் கண்டிரா
மகிமையுடையவர் எங்கள் தேவனே

நீரே உன்னதர்
நீரே பரிசுத்தர்
நீரே மகத்துவர்
உமை ஆராதிப்பேன் -2

ஏல்வொலான் நீரே
உமக்கு ஆரம்பம் இல்லையே
ஏல்வொலான் நீரே
உமக்கு முடிவொன்றும் இல்லையே -2

உமை அறிந்தவர் இல்லையே
உமை புரிந்தவர் இல்லையே
உமை கண்டவர் இல்லையே
உமக்கு உருவங்கள் இல்லையே